கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன்

கவிதைகளில்

# தலைமைத்துவத் தகைமைகள்



மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகளில்

# தலைமைத்துவத் தகமைகள்

மூதூர்.எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் தலைமைத்துத் தகமைகள் |
| விடயம் | : | ஆய்வு |
| ஆசிரியர் | : | மூதூர்.எம்.எம்.ஏ.அனஸ் |
| அட்டைப்படம் | : | பி.விஜே |
| வெளியீடு | : | மூதூர் கலை இலக்கியஒன்றியம் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | : | 2015 கார்த்திகை |
| ISBN | : | 978-955-42444-1-2 |
| பிரதிகள் | : | 500 |
| விலை | : | 100.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இந் நாட்டு முஸ்லிம் சமூகத்தில் நல்ல அரசியல் தலைமைத்துவங்கள் உருவாக வேண்டுமெனச் சிந்தித்த முக்கிய முன்னோடிகளில் ஒருவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸின் முன்னாள் மூத்த துணைத் தலைவரும் அன்றைய என் அரசியல் பயணத்தில் எனக்குப் பக்க பலமாக இருந்தவரும் மரபுக்கவிதை யாப்பது பற்றி எனக்குக் கற்றுத் தந்தவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸின் தேசியத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் அவர்களின் முன்னிலையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் 1995 ஏப்ரல் நடந்த கூட்டமொன்றில்

**“முஸ்லிம் காங்ரஸில்**

**புற்றுநோய்க்காரர்கள் நிறைந்திருக்க**

**ஆஸ்துமாக்கார அனசுக்கு**

**ஏன் இந்த தண்டனை”**

என எனக்காகக் கவி பாடியவருமான என் நேசத்துக்குரிய கவிஞர் மர்ஹூம் மருதூர்க்கனி(யு.எம்.கனிபா) அவர்கட்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

ஒரு சமூகத்தின் தலைவிதி அச்சமூகத்தை வழிநடத்திச் செல்கின்ற தலைமைத்துவத்தின் கரத்திலத் தான் தங்கியுள்ளது.இன்றைய காலகட்டத்தில் ஓர் அரசியல் தலைமைத்துவம் தான் அச்சமூகத்தின் உயர்ச்சியையும் வீழ்ச்சியையும் நிர்ணயிக்கக் கூடிய சக்தியாக திகழ்கின்றது.

கவிஞர் மர்கூம் கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்கள் சிறந்த அரசியல் ஞானம் மிக்கவராகவும் தீவிர அரசியல் நாட்டமுடையவராகவும் திகழ்ந்தார். தம் காலத்தில் மூதூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் திகழ்ந்த மர்கூம் ஏ.எல்.அப்துல் மஜீது அமரர் அ.தங்கதுரை ஆகியோருடனும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் போன்றவர்களுடனும் மிக நெருக்கமான உறவை பேணிவந்தார். அதே போல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்கூம் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் அவர்களுடனும் நெருக்கமான உறவுகளை வைத்திருந்தார்.

இதன் காரணமாகக் கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்கள் ஓர் சிறந்த அரசியல் தலைமைத்துவத்திற்கு என்னென்ன சிறப்பம்சங்கள் காணப்படல் வேண்டும் என்பதையெல்லாம் தன் அனுபவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாக நன்கறிந்து தான் எழுதிய அரசியல் வானில் ஆதவன் அஷ்ர.்.ப், அழியாப்புகழ் அப்துல் மஜீது ஆகிய கவிதைகளினூடாகத் தலைமைதுவத் தகமைகளை அடையாளம் கண்டு அவற்றை மிகத் தெளிவாக எடுத்தியம்புகின்றார். இவ்விரு கவிதைகளும் "மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள்" என்ற நூலில் காணப்படுகிறது.இக்கவிதைகளினூடே தான் ஓர் தலைமைத்துவத்திற்கான தகைமைகளை இங்கு நான் ஆய்வுக்குட்படுத்தியுள்ளேன்.

ஓர் சமூகமோ ஓர் இனமோ தங்களுக்கான தலைமையைத் தேர்வு செய்யும் போது கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் அவர்கள் குறிப்பிடும் தலைமைதுவத் தகைமைகளை அடிப்படையாகக் கொண்டு தம் தலைமையைத் தெரிவு செய்யுமாயின் அச்சமூகம் அல்லது அந்த இனம் உன்னத நிலையையும் உயர்ச்சியையும் தனக்கு உரித்துடையதாக ஆக்கிக்கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

நன்றி

பெரிய பாலம்
மூதூர் - 05
தொடர்பு – 0776288299

எம்.எம்.ஏ.அனஸ்
2015.06.11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன்

## கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள்

கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவ தகைமைகள் என்ற விடயத்தை இங்கு ஆய்வுக்கு உட் படுத்துகின்ற போது முதலில் கவிஞர் "அழியாப்புகழ் அப்துல் மஜீது" எனும் தலைப்பில் எழுதிய கவிதையில் இருந்து சில கவியடிகளை எடுத்து நோக்குவோம். அதில் வரும் ஓர் கவிதையடியில்

**"வீரமே செறிந்த முகம் பகைமைதனை**
**விரட்டுகின்ற விழிகளுடன் தூயவுள்ளம்**
**தீரமே நிறைந்த செயல் அவனுக்குத்**
**தெரியாதோர் ஊரினிலே யாருமில்லை"**

எனப்பாடுகின்றார்.

இதில் **"வீரமே செறிந்த முகம்"** என்ற சொல் ஓர் தலைமைத்துவத்தின் மாபெரும் தேவைப்பாடாய் இருந்துகொண்டிருக்கின்றது. ஓர் தலைமைத்துவத்தை அலங்கரிக்கின்ற முக்கிய அடையாளமாக இது இருந்துகொண்டிருக்கிறது. அந்த தலைவனைப் பார்க்கின்ற போது அநியாயக் காரர்களுக்கு அச்ச உணர்வு ஏற்படல் வேண்டும். அத்தலைவனின் முகம் வீரத்தின் பிரதிபளிப்பாக இருத்தல் வேண்டும். மாறாக ஒரு தலைவனின் முகம் கோழைத்தனத்தை வெளிக்காட்டி நிற்குமாயின் அவனுக்கு அடங்கிநடக்க மக்கள் தயங்குவார்கள். வீரமே செறிந்த முகம் ஓர் தலைமைத்துவத்திற்கு அமையுமாயின் அவன் தலைமையின் கீழ் உள்ள மக்கள் அத்தலைமைக்குப் பணிந்தும் அடங்கியும் நடப்பதுடன் தலைமைத்துவக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டுக்குட்பட்டவர்களாகவும் இருப்பார்கள் எனவும் எதிர்பாக்கலாம்.

அடுத்து வரும் கவிதை வரியில் கவிஞர் **"பகைமைதனைவிரட்டுகிற விழிகளுடன் தூயஉள்ளம்"**எனப்பாடுகின்றார் இங்கே "பகைமைதனை விரட்டுகின்ற விழிகள்" என்ற வாசகம் ஓர் தலைமைத்துவத்தின் மாபெரும் யதார்த்தத்தைப் புலப்படுத்தி நிற்கின்றது ஓர் தலைவனுடைய விழிகள் அவனுடைய பார்வைகள் அவன் விரோதிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தக்

கூடிய அளவுக் இருக்கவேண்டும் எனக்கவிஞர் குறிப்பிடுகின்றர் அதேவேளையில் அந்த தலைமைத்துவத்திற்கு உட்பட்ட மக்களுக்குக்கூட அச்ச உணர்வை ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். இதன் மூலம் அம்மக்கள் அத்தலைமைத்துவதற்கு அடங்கி நடப்பவர்களாக இருப்பதற்கு பகைமைகளை விரட்டுகின்ற விழிகள் ஓர் தலைவனை அலங்கரிக்கும் பண்பாக அமைகின்றது எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்.

மேலும் கவிஞர் இதே கவிவரியில் ஓர் தலைமைத்துவத்திற்கு தூயஉள்ளம் அவசியம் இருக்கவேண்டுமெனக்குறிப்பிடுகின்றாா ஓர் தலைவனுடைய உள்ளம் தூய்மையாக இருக்கும் போதுதான் அத்தலைவனுடய உள்ளத்தில் நல்லசிந்தனைகளும் நல்லதிட்டங்களும் உருவாகக் கூடியதாக இருக்கும் இந்நிலைமைதான் அத்தலைமையின் கீழ் உள்ள மக்களுக்கு நன்மைபயப்பனவாக அமையும் அத்துடன் அத்தலைவனின் உள்ளத்தில் தீய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எணணங்களும் தீயசிந்தனைகளும் குடிகொணடிருக்கக் கூடாது என்றும் குறிப்பாகக் கவிஞர் உணர்த்தி நிற்கின்றார் அதுபோல் அடுத்துவரும் கவிவரியில் கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம் முகைதீன் ஓர் தலைமைத்துவத்தின் தகைமைகளில் ஒன்றாக

**"தீரமே நிறைந்த செயல்"** அவனிடம் நிறைந்திருக்கவேண்டும் என்கிறார்.ஓர் தலைமைத்துவம் சாதாரன செயல்களையும் தாண்டி வியக்கத்தக்க பிரமிப்பூட்டக்கூடியகாரியங்களை சாதிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்கிறார்.ஓர்சமூகம் பரியறை தேவைப்பாடுகள் நிறைந்ததாகக் காணப்படும் போது அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்குஅதன் தலைமைத்துவத்திடம்அபார ஆற்றல் காணப்படல்வேண்டும். அதனைத்தான் கவிஞர் **"தீரமே நிறைந்தசெயல்"** என்கிறார். தலைமைத்துவ தகைமை பற்றிக் கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் தன் கவி வரியில் மேலும் குறிப்பிடுகையில்

**"அவனுக்குத் தெரியாதோர் ஊரினிலே யாருமில்லை"** என்கிறார். அதாவது ஒரு தலைவன் தன் தலைமைத்துவத்தின் கீழ் வாழ்கின்ற அனைத்து மக்களையும் நன்கறிந்தவனாக இருக்க வேண்டும். தனிப்பட்ட வகையில் அவர்கள் ஒவ்வொருவரினது பெயர் குடும்பம் வாழும் வீடு பிரதேசம் அனைத்தையும் அறிந்தவனாகத் திகழ வேண்டும் இவ்வாறு ஒரு தலைவன் தன் தலைமைக்குட்பட்டவர்களைத் தனிப்பட்ட வகையில் அறிந்து செயற்படும்போது மிகநெருக்கமான உறவுகளை அம்மக்களுடன் பேணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து தலைமைத்துவ தகைமை பற்றிக் கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் பாடுகையில்

**"அழகுடனே செந்தமிழைச் செப்பிடுவோன்**
**அரசியலில் தூரத்து நோக்குடையோன்**
**பழகுவோர் மெச்சுகின்ற பன்புடையோன்**
**பருதியென எங்கும்மறி முகமானோன"**

என்கிறார் இதில் அழகுடன் செந்தமிழ் செப்பிடுவோன் என்கின்ற கவிவரியில் ஓர் தலைவன் தன் தாய் மொழியில்நல்ல பரீட்சயமும் ஆற்றலும் மிகைந்தவனாகக் கானப்படல் வேண்டும். மக்கள் மனங்களைக் கவரக்கூடிய அளவுக்கு அவனிடம் மொழிவளம் கானப்படல் வேண்டும் தன்னுடைய பேச்சாற்றலினால் தன் ஆதரவாளர்களை என்றும் தன் பக்கம் ஈர்த்து தொடர் தேர்ச்சியான வெற்றிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த மொழியாற்றல் ஓர் தலைவனுக்கு இன்றியமையாத்தன்மை கொன்டதாக இருக்கின்றது.

அடுத்து வரும் கவியடியில்

**"அரசியலில் தூரத்து நோக்குடையோன்"**

என்கிறார். அதாவது ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையையும் நோக்கையும் விட ஓர் தலைவனின் சிந்தனையும் பார்வையும் நோக்கும் மிகவும் பரந்துபட்டதாகவும் தூரநோக்குடையதாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு அமையும் போது தான் அத்தலைமைத்துவத்தால் அச் சமூகம் உன்னத நிலையை அடையும். பல்லாண்டுகளுக்குப் பின்பு ஒரு சமூகம் அனுபவிக்கக்கூடிய இன்ப துன்பங்களை இன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர கூடிய ஆற்றல் ஓர் தலைமையை அணிசெய்ய வேண்டும். இவற்றைத்தான் கவிஞர் இங்கு **அரசியலில் தூரத்து நோக்கு** என்ற வார்த்தையினூடே இதனைச் செப்புகின்றார்.

மேலும் தலைமைத்துவத் தகைமை பற்றிப் பாடுகையில்

**"பழகுவோர் மெச்சுகின்ற பண்புடையோன்"**

என்கிறார். அதாவது ஒரு தலைவனுடன் பழகுகின்ற மக்கள் அவனை மெச்சுகின்ற அளவுக்கு அவன் அம்மக்களுடன் உன்னதமான முறையில் பழகவேண்டும். மக்களை மதித்து அவர்களுக்குரிய கண்ணியத்தை கொடுத்து அத்தலைமை திகழ வேண்டும்.

மற்றைய கவிவரியில்

**"பருதியென எங்கும்மறி முகமானோன்"**

எனக்கூறுகின்றார். அதாவது ஒரு தலைவனுக்கு நல்ல அறிமுகங்கள் இருக்கவேண்டும். சூரியனைப்போல அவனுடைய அறிமுகங்கள் மிகவும் பிரபல்யமாக அமைய வேண்டும். அந்த அறிமுகத்தினூடாக அத்தலைவன் நிறையச்சேவைகளை மக்களுக்கு ஆற்றக்கூடியதாக அமையும்.

மேலும் கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் "அழியாப்புகழ் அப்துல் மஜீது"எனும் கவிதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சோர் வென்ற சொல் தெரியாத்துடிப்பாளன்
சேவையால் நற்றலைமை தந்திட்டோன்
சீர்மிகுந்த கொள்கையிலே துலங்கிட்டோன்
செழுமையை இனம்கானச் செய்திட்டோன்"**

எனத் தலைமைத்துவத் தகைமைகளைச் செப்புகின்றார்.

**"சோர் வென்ற சொல் தெரியாத்துடிப்பாளன்"**

என்கிறார். ஓர் தலைவன் சோர்ந்திருக்ககூடாது. அவன் எப்போதும் துடிப்பானவனாகவும் செயல்படக்கூடியவனாகவும் இருக்கவேண்டும். தலைமைத்துவத்தின் தலையில் ஆயிரமாயிரம் பொறுப்புக்கள் சுமத்தப்பட்டிருக்கும் அவற்றையெல்லாம் நிறைவேற்றுவற்கு அந்த தலைவன் சோர்வென்ற சொல்லே தெரியாதவனாக இருந்து காரியமாற்ற வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து கவிஞர் கூறுகையில்

**"சேவையால் நற்றலைமை தந்திட்டோன்"**

என்கிறார். ஆம் ஓர் தலைமைத்துவம் மக்கள் தேவை எல்லாம் நிறைவு செய்து பொதுப்பணிகள் யாவையும் பூர்த்தி செய்து நல்ல தலைவன் என்று அம்மக்கள் மெச்சக்கூடியளவுக்குத் திகழ வேண்டும்.

மேலும் கவிஞர் குறிப்பிடுகையில்

**"சீர்மிகுந்த கொள்கையிலே துலங்கிட்டோன்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார். அதாவது ஒரு தலைவனுடைய கொள்கைகளும் சிந்தனைகளும் நோக்கங்களும் உன்னத தன்மை கொண்டனவாக அமைய வேண்டும்.

தொடர்ந்து தலைமைத்துவ தகைமை பற்றிக் கவிஞர் குறிப்பிடுகையில்

**"செழுமையை இனம்கானச் செய்திட்டோன்"**

என்கிறார். அதாவது ஓர் தலைமைத்துவத்தின் ஊடாக அவன் தலைமை நல்கும் சமுதாயம் உயர்வுற வேண்டும். செழுமையுற வேண்டும். எனக் குறிப்பிடுகின்றார்.

அதே போல் கவிஞரின் அடுத்ததோர் வரியில்

**"முற்போக்கு மன்றமதை அமைத்திட்டோன்**
**முத்தமிழை வளர்க்க விழா எடுத்திட்டோன்**
**அற்புதமே அவன்செயல்கள் யாவுமிங்கு**
**ஆண்டவனின் அருளேதான் அவன் எமக்கு"**

எனப் பாடுகின்றார்.

**"முற்போக்கு மன்றமதை அமைத்திட்டோன்"**
என்ற கவிவரிமூலம் கவிஞர் ஒரு தலைவன் தன்னுடைய திட்டங்களையும் சேவைகளையும் சிறப்புடன் செய்வதற்க்கும் தனது வேலையின் சுமைகளைக் குறைத்துக் கொள்வதற்கும் தன் கீழான மக்களையும் தன் பணியில் பங்கேற்க செய்வதற்கும் பல்வேறுபட்ட குழுக்களையும் அமைப்புக்களையும் உருவாக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

அதே போல் கவிஞர் குறிப்பிடுகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அற்புதமே அவன்செயல்கள் யாவுமிங்கு**
**ஆண்டவனின் அருளேதான் அவன் எமக்கு"**

எனக் கூறுகின்றார். இதன்படி ஒரு தலைவனுடைய செயல்பாடுகள் யாவும் அதிசயமானதாகவும் மக்கள் ஆச்சரியப்படக்கூடிய அளவுக்கு உயரியதாகவும் அமையவேண்டும். ஓ.... இந்த பிரமாண்டமான காரியத்தை செய்து முடித்துவிட்டானே! இந்த தலைவன் என மக்கள் பிரமிப்படையக்கூடியதாக இருக்கவேண்டும். தலைவன் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என மக்கள் கூறக்கூடிய அளவுக்கு ஓர் தலைவன் இருக்கவேண்டும்.

மேலும்

**ஆண்டவனின் அருளேதான் அவன் எமக்கு"**
என மக்கள் அத்தலைவன் எமக்குக்கிடைத்த பெரும் பாக்கியம் இவன் எமக்குத் தலைவனானது ஆண்டவனின் அருளாகும் என்று கதைக்கக்கூடிய அளவுக்கு அத்தலைவனுடைய செயல்பாடுகள் உயரியதாக அமையவேண்டும். எனக் குறிப்பிடுகின்றார்.

*மேலும் கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன்* "அழியாப்புகழ் அப்துல் மஜீது"எனும் தலைப்பிலான தன் கவிதையினூடே ஓர் தலைமைத்துவத்தின் தகைமையை அடையாளப்படுத்துகின்ற போது

**"கற்பனையில் ஊர்உயர்வு கண்டிட்டான்**
**கற்கள் கதை சொல் கட்டிடம் தந்திட்டான்**
**அற்புதமாய் அருந்திட்டம் வகுத்திட்டான்**
**அழியாத புகழ்தன்னை அடைந்திட்டான்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பாடுகின்றார். இதில்

**“கற்பனையில் ஊர்உயர்வு கண்டிட்டான்”**

என்ற கவிவரியானது மிக உயரிய தலைமைத்துவத்தின் தகைமையை செப்பிநிற்கின்றது. அதாவது ஓர் தலைவன் தனது ஊர் இன்னென்ன துறையில் இவ்வாறு இவ்வாறு உயர்ச்சியுற்றிருக்க வேண்டும் என்பதையெல்லாம் அத்தலைவன் தன் கற்பனையினூடாகக் காண வேண்டும். அதாவது தூரப்பார்வையினூடக தீர்க்கதரிசன பார்வையினூடாக தன் ஊரின் உயர்ச்சியை காணக் கூடியவனாக இருக்கவேண்டும். அவ்வாறு கற்பனையில் ஊரின் உயர்ச்சியைக் காண்கின்ற போதுதான் யதார்த்த நிலையில் தன் ஊரை முன்னேற்றக்கூடியதாக இருக்கும் சிந்தனைத்திறனும் கற்பனை வளமும் நிறைந்த தலைவனால் தான் சிறந்த திட்டங்களை செயல்படுத்த முடியும்.

அடுத்த கவி வரியில் கவிஞர்

**“கற்கள் கதை சொல் கட்டிடம் தந்திட்டான்”**

என்கிறார். அதாவது ஓர் தலைவனுடைய சேவைகளைப்பற்றிக் கல்லும் மண்ணும் காவியம் பாட வேண்டும் என்பார்கள். அந்தளவுக்கு ஓர் தலைவன் அந்த பிரதேசத்தில் பல்வேறுபட்ட காரியாலயங்களுக்குரிய கட்டிடங்களையும் வீதிகளையும் பாடசாலைகளையும் பாலங்களையும் போதிய வசதியுடன் அமைத்துக் கொடுக்கக் கூடியவனாக இருக்கவேண்டும்.

தொடர்ந்து கவிஞர் பாடுகையில்

**“அற்புதமாய் அருந்திட்டம் வகுத்திட்டான்”**

என்கிறார். அதாவது ஓர் தலைவன் தன் பிரதேசத்தின் உயர்ச்சிக்கும் விருத்திக்கும் என்னென்ன சேவைகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும் என்னென்ன திட்டங்களை வகுக்க வேண்டும் என்பதில் தேர்ந்தவனாகவும் ஆற்றல் மிகைந்தவனாகவும் திகழ வேண்டும். அத்தலைவன் வகுக்கும் அரிய திட்டம் மூலம் அவ்வூர் முன்னேற்றமும் வளர்ச்சியும் பெற்ற ஊராகத் திகழும்.

**"அழியாத புகழ்தன்னை அடைந்திட்டான்"**
என்கிறார். ஓர் தலைவன் தான் வழங்கும் தலைமைத்துவத்தின் ஊடாக தானடையும் புகழானது சொற்ப காலத்துடன் மறைந்து போககூடிய புகழாக இல்லாமல் நீடித்து நிலைக்க கூடிய புகழாகவும் பல நூற்றாண்டுகள் கடந்த பின்னும் அத்தலைவனைப் போற்றக்கூடியதாகவும் அவன் புகழ் இருக்கவேண்டும். எனக் குறிப்பிடுகின்றார்.

இதனைத் தொடர்ந்து கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் அரசியல் வானில் ஆதவன் அஷ்ர.ஃ.ப்" என்ற கவிதையூடாகத் தலைமைத்துவத்தின் தகைமைகளை அடையாளப்படுத்துகின்றார்.அதில் தன் *முதல் கவிவரியில்*

***"அகிலத்தின் உயிர்புக்கு அடிப்படையாம் ஆதவன் போல்***
**அரசியலின் வானதனில் அஷ்ரபின் சேவை உள"**

என்கிறார். அதாவது உலகின் உயிர்புக்கு சூரியன் எவ்வளவு முக்கியமானதாக உள்ளதோ அதே போல் ஓர் தலைவனுடைய சேவைகள் அந்த சமூகத்திற்கு முக்கியமானதாக இருக்க வேண்டும். அதனால் ஓர் தலைவன் என்னென்ன சேவைகளைத் தாம் அவசியம் செய்ய வேண்டும் எனத்தேர்ந்து அவற்றை நிறைவேற்ற வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

இதனையடுத்து கவிஞர் குறிப்பிடுகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"முகழ் தந்திடும்மழையதனின் மகிமையைப்போல் அன்னவனும் மக்களது மனங்களிலே மறையாமல் மிளிர்கின்றான்"**

என்கிறார். உலகில் மழை எவ்வளவு மகிமைமிக்கதாக இருக்கின்றதோ அதேபோல் மக்கள் மனங்களில் மகிமை பெற்றவனாக ஓர்தலைவன் திகழவேண்டும். எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும் கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் தலைமைத்துவத் தகைமை பற்றி பாடுகையில்

**"தாய்நாட்டுப் பற்றதனைத் தாங்கிட்ட நெஞ்சகமும்**
**தெளிவான கொள்கையுடன் திடமிக்க செயற்பாடும்**
**துஞ்சாமை கல்வியுடன் துனிவுடமை பெற்றிட்டோன்**
**தூற்றியோர் போற்றிடவே துலங்கினான் தலைமையிலே"**

எனக் குறிப்பிடுகின்றார். இங்கு **தாய்நாட்டுப் பற்றதனைத் தாங்கிட்ட நெஞ்சகமும்** என்ற கவிவரி மூலம் ஓர்தலைவன் தாய்நாட்டுப் பற்றில் மிகைந்தவனாக இருக்கவேண்டும். என கூறுகின்றார். அப்போதுதான் அவனின் செயற்பாடுகள் நாட்டின் நலனன அடிப்படையாகக்கொண்டிருக்கும்.

**தெளிவான கொள்கையுடன் திடமிக்க செயற்பாடும்** என்கிறார். அதாவது ஒரு தலைவனிடம் ஒரு தெளிவான கொள்கை காணப்படல் வேண்டும். கொள்கைத் தெளிவில்லாத தலைமைத்துவங்கள் நீடித்து நிலைத்த வரலாறுகள் உலகில் மிக அரிது. அதே போல் ஓர்தலைவனுடைய செயற்பாடும் மிகவும் உறுதியானதாகவும் திடமானதாகவும் இருக்கவேண்டும். ஓர்தலைவன் ஓர் விடயத்தைச் செயற்படுத்தத் துணிந்துவிட்டால் அதில் எந்த விட்டுக்கொடுப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளதளப்பும் இல்லாமல் அவற்றை நிறைவேற்றியே தீர வேண்டும்.

மேலும் கவிஞர் கூறுகையில் **துஞ்சாமை கல்வியுடன் துணிவுடமை பெற்றிட்டோன்** என்கிறார். அதாவது ஓர் தலைமைத்துவத்திடம் துஞ்சாமை தன்மைகள் காணப்படல் வேண்டும். அவனிடம் தூங்கல் தன்மையோ சோம்பல் நிலையோ காணப்படக்கூடாது. அவன் மிகவும் சுறுசுறுப்புடனும் துடிப்புடனும் செயற்படக்கூடியவனாகக் காணப்படல் வேண்டும். அத்துடன் அத்தலைமை கல்வியறிவு நிறைந்த தலைமையாகவும் திகழ்தல் வேண்டும். அதேநேரத்தில் அந்த தலைமையிடம் **"துணிவுடமையும்"** நிறைந்திருக்க வேண்டும். தனக்கு ஏற்படுகின்ற பல்வேறுபட்டப் பிரச்சனையும் தாங்கி எதிர்த்து நின்று செயல்படகூடிய அளவுக்கு ஓர்தலைமையிடம் **"துணிவுடமை"** நிறைந்திருக்க வேண்டும். எதற்கும் அஞ்சாத தன்மை தலைமையின் நெஞ்சத்தில் நிறைந்திருக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து கவிஞர் தன் கவிவரியில் **தூற்றியோர் போற்றிடவே துலங்கினான் தலைமையிலே** என்கிறார். அதாவது ஓர் தலைவனைத் தூற்றிய மக்கள் கூட அத்தலைவனின் திறமையையும் ஆற்றலையும் நற் பண்புகளையும் கண்டு அவனைப் போற்றக் கூடய அளவுக்கு அத்தலைவன் மிளிர வேண்டும்.

இதே போல் கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் தலைமைத்துவத் தகைமை பற்றி பாடுகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"வீரம் செறி முகத்துடனே விண்தூரப் பார்வையையும்**
**வீறுமிகு சிங்கத்தின் வெற்றிநடை தன்னையுமே**
**பூரணமாய் பெற்றவனும் புனிதமுடன் அரசியலில்**
**புகுந்தேதான் இனத்திற்குப் புதுவிடியல் கொடுத்திட்டான்"**

என்கிறார். இதில் **வீரம் செறி முகத்துடனே விண்தூரப் பார்வையையும்** என்ற கவிவரியை நோக்கும் போது ஓர்தலைவனுடைய முகம் எப்போதும் வீரத்தை பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். அவன் முகத்தில் வீரம் தென்படுகின்ற போது அவனுககுட்பட்ட மக்கள் அவனுக்கு அடங்கி நடக்ககூடியதாக இருக்கும். அத்துடன் விரோதிகளும் தலைவனின் வீரம் செறிந்த முகத்தைக் காண்கின்ற போது அச்சம் கொள்வர்.

அடுத்து கவிஞர் குறிப்பிடும் **விண்தூரப் பார்வை** ஓர் தலைமைத்துவத்தின் மாபெரும் சிறப்பம்சமாக இருக்கின்றது. ஓர் விடயத்தைச் செய்யும்போது அதனால் பிற்பட்ட காலத்தில் ஏற்படுகின்ற சாதக பாதகங்களையெல்லாம் முன்கூட்டியே அறிகின்ற தன்மையையே **விண்தூரப் பார்வை** எனும் பதம் குறித்துநிற்கின்றது. மேலும் ஒரு குறுகிய வட்டத்துக்குள் செயற்படாமலும் பரந்துபட்ட சிந்தனைப் போக்குடனும் செயற்படுவதும் **விண்தூரப் பார்வையினுள்த்தான்** அடங்ககின்றது.

மேலும் கவிஞர் தலைமைத்துவம் பற்றி கூறுகையில் **வீறுமிகு சிங்கத்தின் வெற்றிநடை தன்னையுமே** என்கிறார். அதாவது ஓர் தலைவனுடைய நடை கூட வெற்றிநடையாக இருக்கவேண்டும். என்கிறார்.இத்தகைய நடை கூட ஓர் தலைமைத்துவத்தை மெருகூட்டக் கூடியதாக இருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல் கவிஞர் மேலும் கூறுகையில் **புனிதமுடன் அரசியலில் புகுந்தேதான் இனத்திற்குப் புது விடியல் கொடுத்திடான்.**

என்கிறார். அதாவது ஓர் தலைமைத்துவம் புனிதமான நோக்கோடுதான் தன் பதவியை பொறுப்பேற்க வேண்டும். தூய்மையான நோக்கு அவன் உள்ளத்தில் குடிகொண்டிருக்க வேண்டும். அத்துடன் அவன் தலைமை தாங்கும் சமூகத்திற்கு அவனால் விடுதலையும் விமோசனமும் கிடைக்க வேண்டும்.

இவ்வாறு கவிஞர் மேலும்தலைமைத்துவத் தகைமைகள் பற்றிப் பாடுகையில்

**உள்ளத்து உணர்வுர்களை உன்னதமாய் வார்த்தையிலே உரைக்கின்ற புலமைதனை உரித்தாகக் கொன்டிட்டேன்"**

என்கின்றார். அதாவது ஓர் தலைவன் தனது உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வுகளையெல்லாம் பொதுமக்களுக்கு மிகவும் உயரிய முறையில் உரைக்கக்கூடியவனாகவும் இருக்கவேன்டும். அத்தலைவன் உரைகின்ற முறையின் மூலமாகத்தான் அவர்கள் அக்கருத்துக்கினங்கி வரக்கூடியளவுக்கு இருக்கும்.

மேலும் கவிஞர் குறிப்பிடுகையில் **நல்லுயர்ச்சியை கான்பதற்கு நல்வழியைக் காட்டிட்டோன்.** என்கிறார். அதாவது ஓர்தலைவன் தம்கீழான மக்கள் உயர்வுற மேன்மையுற ஓர்சிறந்த வழியைக்காட்ட வேண்டும் அவன் காட்டுகின்ற நல்வழியின் மூலம் மக்கள் உயர்ச்சியுறக்கூடியதாக இருத்தல்வேன்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் மேலும் பாடுகையில் **"ஆங்கிலமும் சிங்களமும் அவர்நாவை அணி செய்ய அழகுடனே செந்தமிழும் அவரிடத்தே அடங்கிவிட ஆங்கவரும் நாடாளும் அரங்கத்தில் மாற்றனியார் அதிசயிக்க அருந்தலைமை ஆகியே சிறப்புற்றான்"**

என்கிறார் .அதாவது ஒருதலைவனிடம் நல்ல மொழிவளம் காணப்படல் வேண்டும் பல மொழி பேசும் ஆற்றல் அவனை அணிசெய்ய வேண்டும் ஓர் தலைவனுடைய ஆற்றலையும் திறனையும் கண்டு எதிர்த்தரப்பினர் அதிசயிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் என்கிறார்

ஒட்டு மொத்தமாகக் கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம் முகைதீன் முஸ்லிம் சமூகத்தின் சிறந்த அரசியல் தலைமைகளாகப் போற்றபடுகின்ற முன்னாள் மூதூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் தகவல் ஒலிபரப்புத்துறைப் பிரதியமைச்சருமான மர்கூம் ஏ.எல்.அப்துல் மஜீது மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத்தலைவர் மர்கூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் ஆகிய இருபெரும் தலைவர்களிடம் நிறைந்திருந்த தலைமைத்துவச் சிறப்பம்சங்களிஊடாகத் தலைமைத்துவத் தகைமைகளை அடையாளப் படுத்தியுள்ளார். இத்தகைய தன்மைகள் நிறைந்த தலைமைத்துவங்களினாலத்தான் அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தும் சமூகமும் ஊரும் முன்னேற்றத்தின் சிகரத்தை அடைய முடியும் என நாம் எதிர்பாக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன்

சேற்றிலே முளைத்த செந்தாமரையாய் கூழாங்கல்லிடை உருவான மாணிக்கமாய் மூதூர் தக்வாநகர் வட்டம் என்னும் கிராமத்தில் சதக்கு லெவ்வை அசியா உம்மா என்பவருக்கு மகனாக 08.05.1937ம் ஆண்டு கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீனின் பிறந்தார். இந்த வட்டம் எனும் பிரதேசத்தின் ஸ்தாபகரும், ஸ்தாபக குடிமகனுமாக இவருடைய தந்தையார் சீனிமெய்யதீன் சதக்கு லெவ்வை அவர்களே இருந்தார். இவர் வட்டத்து மண்ணில் குடியேறியது விவசாய நோக்கத்திற்காகவேயன்றி கடலை அண்மித்திருப்பதன் காரணமாக மீன்பிடித்தொழிலை நோக்கமாகக் கொண்டல்ல. "போடி கந்தர" என்னும் உயரிய விவசாயப் பரம்பரையைச் சேர்ந்த சதக்கு லெவ்வை அவர்கள் வட்டத்து மண்ணிலே மா, பலா, தென்னை போன்ற பல்லாண்டு பயிர்களையும் மரவள்ளி, வற்றாளை போன்ற சிறு பயிர்செய்கையிலும் ஈடுபட்டு அதன் மூலம் வருமானத்தை ஈட்டிக்கொண்டார். இன்றும் இந்த வட்டத்து மண்ணில் சதக்கு லெவ்வை அவர்களின் குடும்பத்தவர்களே அதிகம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் தனது ஆரம்பக்கல்வியை மூதூர் கோட்டையாற்று பள்ளிக்கூடத்தில் (இன்றைய மூதூர் மத்திய மகா வித்தியாலயம் தேசியப்பாடசாலையில் கற்றார்) வாசிப்பதில் அதிக ஆர்வம் கொண்ட இவர் நிறைய நூல்களை வாசித்தறிந்து தன் அறிவை விரிவாக்கிக் கொண்டார். அத்துடன் இவர் இயற்கையாகவே அறிவு, ஞானம் வாய்க்கப் பெற்றவராகவும் திகழ்ந்தார். ஐம்பெரும் காப்பியங்கள், திருக்குறள், சீறாப்புராணம், திருக்குர்ஆன், தெளிவுரை, ஹதிஸ் கிரந்தங்கள் போன்ற பல்வேறுபட்ட நூல்களையும் வாசித்தறிந்து அவற்றில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்தார். இதனால் தமிழ் இலக்கிய அறிவும் சன்மார்க்க அறிவும், பொதுஅறிவும் அரசியல் ஞானமும் இவரை அணிசெய்து நின்றன. தூரநோக்கும், பரந்த சிந்தனையும் இவரை மேலும் மெருகூட்டின.

இவர் ஓர் ஞானியாக, ஓர் மேதையாக, ஓர் மாமனிதராக எம்மத்தியில் வாழ்ந்து, மறைந்து போன ஓர் பெருந்தகை இவரைப் பற்றிய உண்மையான தெளிவு ஊரில் அநேகருக்குத் தெரியாது எந்த இடத்திலும், எவ்வேளையிலும், எவ்விடயத்தையும் நன்கே கதைக்கும் தத்துவமும் திறனும் கொண்டவராக காணப்பட்டார். உண்மை, நேர்மை, நீதி, மனுதர்மம் என்பவற்றிற்கு உயரிய இலக்கணமாகவும், முன்மாதிரியாகவும் இவ்வூரில் வாழ்ந்தார். பணத்திற்கோ, அதிகாரத்திற்கோ என்றுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபணியாதவர். நல்ல உடலமைப்பும், பலமும், உயரமும், தோற்றமும் கொண்ட இவருடன் யாரும் மோதுவதற்கு அச்சத்தை ஏற்படுத்தும். அதே நேரத்தில் பிழையைக் காணின் அதிகம் கோபம் கொள்ளக்கூடியவராகவும் காணப்பட்டார். பாம்பின் காலை பாம்பு தான் அறியும் என்பதற்கொப்ப அவருடைய தாய் தன்மகனின் பலத்தையும், கோபத்தையும் நன்கறிந்திருந்ததனால் மகனே! நீ யாரிடமும் சண்டையிடக் கூடாது. அப்படிச் சண்டையிட்டால் நான் உனக்கு ஊட்டிய பால் "கறாம்" (விலக்கப்பட்டது) ஆகும் எனக்கூறி இவரிடம் தாய் சத்திய வாக்கைப் பெற்றதாக அறியக்கூடியதாக உள்ளது. இதனால் அவர் பிறருடன் சண்டையிடுவதைத் தவிர்த்தவராகவே வாழ்ந்து வந்தார்.

மேலும் கறைபடியாக் கரம் இவர் உடைமையாகும். தன் உடலில் ஓடுகின்ற ஒவ்வோர் துளி இரத்தமும் தன் நேர்மையான உழைப்பின் மூலம் ஓடுவதாகவே இருக்க வேண்டும் என்பதில் மிகமிகக்கரிசனையாக இருந்தார். தனக்கு எது நேர்ந்தாலும் எல்லாம் இறைவன் விதிப்படித்தான் நடக்கிறது என்பதில் மிகஉறுதியாக இருந்தார். எதையும் தாங்கும் மனோ வலிமையும் திடனும் கொண்டிருந்தார். இறையச்சம் கூடிய ஒருவராகக் காணப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஓர் விழாவிலோ, கூட்டத்திலோ, உரையாற்ற எழுந்துவிட்டால் அவர் அக்கணம் ஓர் நாவலராக மாறிவிடுவார். அடுக்கு மொழிகளுடன், திருக்குர்ஆன் உதாரணமும் திருநபியின் கூற்றுக்களும், திருக்குறளும், தமிழ் இலக்கியச் செய்யுள்களும் பொன் மொழிகளும், அவர் வாயில் இருந்து வளமாக, வரமாக வந்து கொண்டே இருக்கும். ஓர் மனிதனின் வாய்வார்த்தைகளில் இருந்து, அவன் நடை, உடைகளில் இருந்து அவன் எப்படிப்பட்டவன் என்பதையும், அவன் உள்ளத்தில் பொதிந்திருக்கும் விடயங்களையும் அறிந்து கொள்ளும் அபார ஆற்றல் பெற்றிருந்தார். இன்றைய ஓர் விடயம் நாளை எவ்வாறு இருக்குமென்று முன்கூட்டியே சொல்லக்கூடிய தீர்க்கதரிசனப் பார்வையும் பெற்றுத் திகழ்ந்தார்.

மகாகவி அல்லாமா இக்பாலுக்கு இறைவன் வழங்கிய “ஒளிமிகு பார்வையைப் போல்” கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீனுக்கும் இறைவன் ஒளிமிகு பார்வையை வழங்கியிருந்தான். அதன் காரணமாக எது சரி, பிழை என்று உரைக்கக்கூடிய உயரிய தன்மை பெற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகையும், புதுப்பொழிவும் என்றும் இவர் முகத்தில் தவழும், எனது உடன்பிறந்த சகோதரர் மர்கூம்.ஏ.சி.கபீர் முகம்மது (அதிபர்) அவர்களின் மிகமிக நெருங்கிய நண்பர் இவர். இவரும் எனது சகோதரர் ஏ.சி.கபீர் முகம்மது அவர்களும் ஒன்றாகக் கூடிவிட்டால் அங்கே உரையாடல் கலைகட்டிவிடும் நகைச்சுவையும் கலகலப்பும் சிரிப்பொலியும் மேலோங்கி நிற்கும்.

அன்று படிப்பின் வாசனையே அற்றிருந்த மூதூர் அக்கரைச்சேனைப் பகுதியில் ஓர் பாடசாலை உருவாக (தி.ஃ.அல்ஹிலால் மகாவித்தியாலயம்) மிகவும் பாடுபட்டவர். அதன் முக்கிய ஸ்தாபகர். இவர் காட்டுக்குச் சென்று கம்புதடி வெட்டிவந்து கலைக்கூடம் கட்டிவிட்டு, ஒதுக்கிச் சென்றறுவிடவில்லை. தான் மரணிக்கும் வரைக்கும் அல்ஹிலாவின் வளர்ச்சிப்படிகளில் தனது காலை நன்கு பதித்தவர். அப்பாடசாலையின் அபிவிருத்திக் குழுச் செயலாளர், உறுப்பினர் என்றெல்லாம் வருடக் கணக்கில் பதவி வகித்தார். நான் தி.ஃ.அல்.ஹிலால மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய காலகட்டத்திலும் எனக்கு பள்ளிக்கூட விடயத்தில் அதிகூடிய ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் நல்கினார். நானும் பலவிடயங்களில் அவரின் ஆலோசனையைப் பெற்று கலைக்கூட உயர்ச்சிக்காகச் செயலப்பட்டதை மீட்டுப்பார்க்கின்றேன். கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் மிகவும் மரியாதையுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.

மேலும் இவர் இந்த ஊரில் மீனவர்களின் உயர்ச்சியைக் கருத்தில் கொண்டு முதலாவது மீன்பிடிச்சங்கத்தை ஸ்தாபித்தார். தொடர்ந்தேர்ச்சியாகத் தானே அச்சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றி மீன்பிடி அதிகாரிகளுடனும், அரசியல்வாதிகளுடனும் தொடர்பு கொண்டு பல பெரிய மீன்பிடி இயந்திரப்படகுகளை முதன்முதலாக மூதூர் மீனவர்கள் பெற வழிவகுத்தார்.

அதே போல் அக்கரைச்சேனை கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராகவும் தொடர்தேர்ச்சியாக பல வருடங்கள் பணியாற்றிய இப்பகுதியின் பல்வேறுபட்ட அபிவிருத்திக்கும் முக்கிய மூலவராகத் திகழ்ந்தார். அக்கரைச்சேனை முகைதீன் ஜும்மா பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் செயலாளராகவும் பல வருடங்கள் நற்பணியாற்றினார்.

மேலும் நெங்தல் நகர் ஹிழ்று ஜும்மா பள்ளிவாயல் வட்டம் ஜும்மா பள்ளிவாயல், தக்வாநகர் ஜும்மா பள்ளிவாயல் ஆகியவற்றின் முக்கிய ஸ்தாபராகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்ந்தார். அத்துடன் தான் வாழ்ந்த மூதூர் நெய்தல்நகர் பகுதியில் "மனாறுல் குதா" எனும் பெயரில் பெண்களுக்கான குர்ஆன் பாடசாலையின் முக்கிய ஸ்தாபகர்களில் ஒருவராகவும் இருந்ததுடன் அதன் செயலாளராகவும் கடமையாற்றினார். தான் மரணிக்கும் வரை தினமும் அதன் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

மேலும் அன்று எழுதப்படிக்கத் தெரியாத பிரதேசமாக இருந்த அக்கரைச்சேனைப் பகுதியில் பொதுமக்கள் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதுதல், விண்ணப்பம் நிரப்புதல் போன்ற பல்வேறு தேவைகளுக்கும் கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்களையே நாடிச் செல்வர். இவ்வாறு தன்னுடைய வாழ்வின் கூடிய காலப் பகுதியை சமூக சேவைக்காகவே அர்ப்பணித்த ஓர் மாமனிதரைப் பற்றி இந்நூலில் எழுதக் கிடைத்தமையையிட்டு நான் உண்மையிலேயே பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் இவர் நாட்டுவைத்தியம் பேய், பிசாசு, மந்திரதந்திரங்கள், ஆத்மீக வைத்தியம் என்பவற்றிலும் நன்கு தேர்ந்தவராகத் திகழ்ந்தார். அக்கரைச் சேனைப் பிரதேசத்தில் (வட்டம், தக்கவா நகர் உட்பட) அவர் வாழ்ந்த காலத்தில் குழந்தையைப் பிரசவிக்கும் தாய்மார்கள் எல்லாம் இவர் ஓதிய வெற்றிலையைச் சாப்பிட்டால் பிரசவம் இலேசாக அமையும் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள் மேலும் இவர் தற்காப்புக் கலையான சீனடி, சிலம்படி, கம்புவீச்சு போன்ற விளையாட்டு வித்தையிலும் நன்கு தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார்.

அத்துடன் இவர் இப்பிரதேசத்தில் பொதுமக்களின் பிரச்சினைகளான, குடும்பப் பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள், பணக்கொடுக்கல் வாங்கல்கள் பிரச்சினைகள் போன்ற இன்னோரன்ன பல பிரச்சினைகளுக்கும் தீர்வு கூறுவார் மக்கள் தீர்வு வேண்டி அதிகம் இவரையே நாடிச் செல்வர். இவருடைய தீர்ப்பை மரியாதையுடன் மக்கள் அதிகம் ஏற்றுக் கொள்வார். தம் வாழ்நாளில் இத்தகைய ஆயிரமாயிரம் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த பெருமனிதனின் பணியை மீட்டிப் பார்க்கும் போது அவர் மீதான மரியாதை என்னில் நிறைகிறது.

"போடி கந்தர" எனும் விவசாயப் பரம்பரையில் பிறப்பெடுத்த இவர் மிகச்சிறந்த விவசாயியாகவும் திகழ்ந்தார். மண்வெட்டி, கத்திதனைத் தன்கரத்தில் அவர் ஏந்திவிட்டால் அவருக்கு நிகராக யாருமே வேலை செய்ய முடியாது.

வேகமும், அழகும் அவர் பணியை அணிசெய்து நிற்கும் அதேபோல் மிகச்சிறந்த
வியாபாரியாகவும் காணப்பட்டார். (சில்லறைக் கடை, அரிசி ஆலை, மொத்த விற்பனைக் கடைகளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தினார்) கடற்றொழிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். கடலில் நீந்துதல், கடலின் அடியில் சுளி ஓடுதல் போன்றவற்றிலும் நல்ல அனுபவம் பெற்றிருந்தார்.

ஒரு பூரண மனிதனாக ஊரில் வாழ்ந்த பெரியார் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்கள் மூதூரின் பெரும்புலவர் உமர் நெய்னார் அவர்களின் புத்திரியான சபியா உம்மா என்பவரை மணந்தார். இதன் மூலம் அவருக்கு

01. எம்.எம்.ஏ.அனஸ் (தொழில் உயர்வு அதிகார சபை - இலங்கை துறைமுக அதிகார சபை)
02. எம்.எம்.ஏ.அஜிஸ் (போக்குவரத்து சபை - மூதூர்)
03. எம்.எம்.ஏ.அறூஸ் (வலயக்கல்வி அலுவலகம் - மூதூர்)
04. எம்.எம்.எம்.அனிஸ் (ஆசிரியர்)
05. எம்.எம்.எம்.அயாஸ் (வைத்தியர்)
06. எம்.எம்.எம்.அப்பாஸ் (ஆசிரியர்) ஆகிய ஆறு ஆண் மக்களும்
07. அசறியா வகார்தீன்
08. மர்ளியா இம்டாட்
09. ஜாபிறா றவஸ்தீன்
10. ஆபிதா முகைதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய நான்கு பெண் மக்களுமாக மொத்தம் பத்துப்பிள்ளைச் செல்வங்கள் அவருக்குக் கிடைத்தன. அவரின் வாரிசாக இவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வுலகில் உன்னத வாழ்வு வாழ்ந்த மாமனிதர் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்கள் 01.05.2008ம் திகதி தனது 71ம் வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

"ஓர் தந்தை தன் மரணத்திற்குப் பின் தன் தனயர்களில் வாழ்கிறான்" என்ற தத்துவ மொழிக்கொப்ப கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்கள் மரணமடைந்து விட்டாலும் அவரின் நினைவாக அவரின் நிழலாக அவரின் தனயர்கள் அவரின் கொள்கை செயற்பாடுகளின் நெறியே வாழ்ந்து கொண்டிருப்பதை கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். குறிப்பாக அவரின் மூத்த மகனான இந்நூலின் தொகுப்பாசிரியரும் எனது மாணவனுமான மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் சைகக் காணும் போதெல்லாம் எனக்கு அவரின் தந்தையின் ஞாபகம் தான் வரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தந்தையைப் போலவே சகல தன்மைகளும் பொருந்தியவராக இவரும் உள்ளமையைக் கண்டு நான் பெரிதும் உவகையுறுகின்றேன். கவிஞர் மூதூர்.எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிய வேண்டுமென இறைஞ்சுகிறேன்.

ஏ.சீ.எம்.மக்கீன்

(முன்னாள் அதிபர்)

பிரதான வீதி, மூதூர்

**(கவிஞர் மூதூர்எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகள் நூலில் இருந்து)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைமைத் தனத்தின் தகைமையது நாட்டில்
நிலைகொள்ள நன்றேதான் நாடிக் - கலைத்துவமாய்த்
தன்கவியில் அன்னது தந்தார் கவிமுகைதீன்
நன்றே அதையாய்ந்தேன் நான்.

மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

ISBN 978-955-42444-0-5

ART 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org